**நான்காவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மதுரை.**

முன்னிலை திரு.S.ஜான் சுந்தர்லால் சுரேஷ், B.Sc.,M.L.,
நான்காவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
மதுரை.

2026ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 08–ம் நாள் புதன்கிழமை

அமர்வு வழக்கு எண்.456/2016

**CNR No. TNMD01-009441-2016**

| | | |
|---|---|---|
| குற்றம் முறையிடுபவர் | : | அரசுக்காக, காவல் ஆய்வாளர்,<br>இ–1 கோ.புதூர்<br>காவல் நிலைய குற்ற எண்.1017/2015 |
| குற்றஞ்சாட்டப்பட்டவர்களின் பெயர்கள் | : | 1. பிரவீன் (எ) சகாயபிரவீன், (30/2015) த/பெ பன்னீர்செல்வம்<br><br>2. மாரிமுத்து, (31/2015) த/பெ சரவணபெருமாள்<br><br>3. ஆரோக்கியபிரபு, (32/2015) த/பெ பன்னீர்செல்வம்<br><br>7. பாண்டி (எ) அட்டாக்பாண்டி (40/2015) த/பெ பொன்னுச்சாமிதேவர் |
| எதிரிகளின் மீது வனையப்பட்ட குற்றச்சாட்டுகள் | : | 1ம் எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 120(B), 341, 294(b), 307 மற்றும் 506(ii)–ன் கீழும்,<br><br>2ம் எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 120(B), 341 உ/இ 120(B), 294(b) உ/இ 120(B), |

| | | |
|---|---|---|
| | | 307 உ/இ 120(B) மற்றும் 506(ii) உ/இ 120(B)–ன் கீழும்,<br><br>3ம் எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 120(B), 341 உ/இ 120(B), 294(b) உ/இ 120(B), 307 உ/இ 120(B) மற்றும் 506(ii) உ/இ 120(B)–ன் கீழும்,<br><br>7ம் எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 120(B) உ/இ 109, 341 உ/இ 120(B) உ/இ 109, 294(b) உ/இ 120(B) உ/இ 109, 307 உ/இ 120(B) உ/இ 109 மற்றும் 506(ii) உ/இ 120(B) உ/இ 109–ன் கீழும், குற்றச்சாட்டுகள் மாற்றி வனையப்பட்டுள்ளது. |
| எதிரிகளின் பதில் | : | குற்றவாளிகள் அல்ல |
| நீதிமன்றத்தின் தீர்மானம் | : | 1ம் எதிரி இ.த.ச. பிரிவுகள் 120(B), 341, 294(b), 307 மற்றும் 506(ii)–ன் கீழும்,<br><br>2ம் எதிரி இ.த.ச. பிரிவுகள் 120(B), 341 உ/இ 120(B), 294(b) உ/இ 120(B), 307 உ/இ 120(B) மற்றும் 506(ii) உ/இ 120(B)–ன் கீழும்,<br><br>3ம் எதிரி இ.த.ச. பிரிவுகள் 120(B), 341 உ/இ 120(B), 294(b) உ/இ 120(B), 307 |

TNMD010094412016



| | | |
|---|---|---|
| | | உ/இ 120(B) மற்றும் 506(ii) உ/இ 120(B)–ன் கீழும்,<br><br>7ம் எதிரி இ.த.ச. பிரிவுகள் 120(B) உ/இ 109, 341 உ/இ 120(B) உ/இ 109, 294(b) உ/இ 120(B) உ/இ 109, 307 உ/இ 120(B) உ/இ 109 மற்றும் 506(ii) உ/இ 120(B) உ/இ 109–ன் கீழும் குற்றவாளிகள் இல்லை என தீர்மானிக்கப்பட்டுள்ளது. |
| தீர்ப்பும் தண்டனையும் | : | 1ம் எதிரி இ.த.ச. பிரிவுகள் 120(B), 341, 294(b), 307 மற்றும் 506(ii)–ன் கீழும்,<br><br>2ம் எதிரி இ.த.ச. பிரிவுகள் 120(B), 341 உ/இ 120(B), 294(b) உ/இ 120(B), 307 உ/இ 120(B) மற்றும் 506(ii) உ/இ 120(B)–ன் கீழும்,<br><br>3ம் எதிரி இ.த.ச. பிரிவுகள் 120(B), 341 உ/இ 120(B), 294(b) உ/இ 120(B), 307 உ/இ 120(B) மற்றும் 506(ii) உ/இ 120(B)–ன் கீழும்,<br><br>7ம் எதிரி இ.த.ச. பிரிவுகள் 120(B) உ/இ 109, 341 உ/இ 120(B) உ/இ 109, 294(b) உ/இ 120(B) உ/இ 109, 307 உ/இ 120(B) உ/இ 109 மற்றும் 506(ii) உ/இ 120(B) உ/இ 109–ன் கீழும், குற்றவாளிகள் இல்லை எனத் தீர்மானிக்கப்பட்டு கு.வி.மு.ச. |

| | | |
|---|---|---|
| | | 235(1)வது பிரிவின் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.<br><br>மேலும் எதிரிகள் வழங்கிய பிணைப் பத்திரங்களை ரத்து செய்து உத்திரவிடப்படுகிறது.<br><br>இவ்வழக்கில் இந்நீதிமன்ற R.P.R.No.11/2021–ல் தாக்கல் செய்யப் பட்டுள்ள சா.பொ.1 கத்தி, சா.பொ.2 கத்தி உறை ஆகியவை பயனற்றவை என்பதால் மேல்முறையீடு காலத்திற்கு பின் அழிக்கவும், சா.பொ.3 – வெள்ளை நிறமுடைய நோக்கியா செல்போன் காலபோக்கில் பயனற்று விட்டதால், அதனை மேல்முறையீட்டு காலத்திற்கு பின் அழிக்கவும், சா.பொ.4 – TN 59 BE 1830– கருப்பு கலர் Honda Dream Yuga இருச்சக்கர வாகனத்தை அதன் உரிமையாளரான இந்த வழக்கின் 2ம் எதிரி மாரிமுத்து இடைக்கால பிணையில் பெற்று சென்றுள்ளதால், அதனை அவரே வைத்துக்கொள்ளவும், மேல்முறையீடு காலத்திற்கு பின் பிணை பத்திரங்கள் ரத்தாகவும், அ.சா.ஆ.14 போட்டாவில் கண்ட TN 59 AL 27 என்ற வெள்ளை நிற Maruti Swift காரை அ.சா.1 ராமகிருஷ்ணனின் அதிகாரம் பெற்ற முகவர் ஜோதி மாதவன் என்பவர் அ.சா.1 ராமகிருஷ்ணனின் சார்பில் |

| | | |
|---|---|---|
| | | இடைக்கால பிணையில் பெற்று சென்றுள்ளதால், அதனை அ.சா.1 ராமகிருஷ்ணன் வைத்துக்கொள்ளவும், மேல்முறையீடு காலத்திற்கு பின் பிணை பத்திரங்கள் ரத்தாகவும் உத்தரவிடப்படுகிறது. |

இந்த அமர்வு வழக்கானது என் முன்பாக 23.03.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது அரசுதரப்பில், அரசுதரப்பு குற்றவியல் கூடுதல் வழக்கறிஞர் திரு.J. ஜவஹர் அவர்கள் முன்னிலையாகியும், 1, 2, 7 எதிரிகள் தரப்பில் திரு. K.மணிகண்டன் வழக்கறிஞர் மற்றும் 1 மற்றும் 7 எதிரிகள் தரப்பில் மூத்த வழக்கறிஞர் திரு.கோபாலகிருஷ்ண லெட்சுமண ராஜு அவர்கள் ஆஜராகியும், 3ம் எதிரி தரப்பில் திரு.K.முத்துக்குமார் வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும் ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டும் வந்ததில் இதுநாள்வரையில் என் பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கலான தீர்ப்பு.

<u>வழக்கு சுருக்கம்</u>

| | | |
|---|---|---|
| 1. | எதிரிகள் நீதிமன்ற காவலில் இருந்த காலம் | இவ்வழக்கின் 1வது எதிரி பிரவீன் என்ற சகாய பிரவீன் 22.11.2015 முதல் 23.02.2016 வரை = 94 நாட்கள்.<br><br>இவ்வழக்கின் 2 வது எதிரி மாரிமுத்து 22.11.2015 முதல் 05.12.2015 வரை = 14 நாட்கள். |

| | | |
|---|---|---|
| | | இவ்வழக்கின் 3வது எதிரி ஆரோக்கிய பிரபு 25.11.2015 முதல் 15.12.2015 வரை = 21 நாட்கள்.<br><br>இவ்வழக்கின் 7 வது எதிரி பாண்டி என்ற அட்டாக்பாண்டி 21.12.2015 முதல் 08.04.2026 வரை = 3762 நாட்கள். |
| 2 | இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நாள் | 21.03.2016 |
| 3. | முதல் நிலை பதிவேட்டு விசாரணை முடிந்து மேல் விசாரணைக்கு அனுப்பி வைக்கப்பட்ட தேதி | 05.10.2016 |
| 4. | குற்றச்சாட்டு வனையப்பட்டு குற்றம் பற்றி வினவப்பட்ட நாள் | 26.11.2024 |
| 5. | தாக்கல் செய்யப்பட்ட குற்ற பல்வகை மனுக்களின் விவரம் | இவ்வழக்கின் 3வது எதிரி ஆரோக்கிய பிரபு தரப்பில் தன்னை இவ்வழக்கிலிருந்து விடுவிக்கக் கோரி U/s 227 CrPC பிரிவின் கீழ் Crl.MP. 79/2018 மனு தாக்கல் செய்யப்பட்டு, கோப்பிற்கு எடுக்கப்பட்டு, 19.04.2018ம் தேதி மனு தள்ளுபடி செய்யப்பட்டது.<br><br>இவ்வழக்கின் 1வது எதிரி பிரவீன் என்ற சகாய பிரவீன் இவ்வழக்கின் சாட்சி எண்.1 திரு.இராம கிருஷ்ணன் என்பவர் தேவதாஸ் மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்ட AR copy, Xray report, Scan report |

| | | |
|---|---|---|
| | | ஆகியவைகளின் நகல் வேண்டி 207 CrPC பிரிவின் கீழ் CrlMP 237/2018 மனு தாக்கல் செய்யப்பட்டு கோப்பிற்கு எடுக்கப்பட்டு, 12.06.2018ம் தேதி மனு தள்ளுபடி செய்யப்பட்டது.<br><br>இவ்வழக்கின் 7 வது எதிரி பாண்டி என்ற அட்டாக்பாண்டி வழக்குப் பொருட்களையும், நகல்களையும் 207 CrPC பிரிவின் கீழ் உடனடியாக பெற்றுத்தர வேண்டி CrlMP 484/2018 மனு தாக்கல் செய்யப்பட்டு, கோப்பிற்கு எடுக்கப்பட்டு, 14.09.2018–ம் தேதி மனு தள்ளுபடி செய்யப்பட்டது.<br><br>மேற்படி 7 வது எதிரி பாண்டி என்ற அட்டாக்பாண்டி தரப்பில் தன்னை இவ்வழக்கிலிருந்து விடுவிக்கக் கோரி U/s 227 CrPC பிரிவின் கீழ் CrlMP 482/2018 மனு தாக்கல் செய்யப்பட்டு, கோப்பிற்கு எடுக்கப்பட்டு, 22.10.2018ம் தேதி மனு தள்ளுபடி செய்யப்பட்டது.<br><br>இவ்வழக்கின் சாட்சி எண்.31 திரு.ரிஷ்வான் அகமத் அவர்களின் மீதான பிடிகட்டளையை திரும்பப் பெறக்கோரி அரசுத் தரப்பில் CrlMP 1231/2025 மனு 23.09.2025ம் தேதி தாக்கல் செய்யப்பட்டு, கோப்பிற்கு எடுக்கப்பட்டு, அன்றையதினமே அனுமதிக்கப்பட்டது. |

| | | | | |
|---|---|---|---|---|
| 6. | அரசு தரப்பு சாட்சிகள் விசாரணை செய்யப்பட்ட நாள் | சாட்சிகள் | மு.வி. | கு.வி. |
| | | அ.சா.1 | 24.02.2025 | 02.02.2026 |
| | | அ.சா.2 | 24.02.2025 | இல்லை |
| | | அ.சா.3 | 24.02.2025 | இல்லை |
| | | அ.சா.4 | 24.02.2025 | இல்லை |
| | | அ.சா.5 | 10.03.2025 | இல்லை |
| | | அ.சா.6 | 10.03.2 025 | இல்லை |
| | | அ.சா.7 | 10.03.2025 | இல்லை |
| | | அ.சா.8 | 21.03.2025 | 21.03.2025 |
| | | அ.சா.9 | 24.03.2025 | இல்லை |
| | | அ.சா.10 | 24.03.2025 | 24.03.2025 |
| | | அ.சா.11 | 08.04.2025 | இல்லை |
| | | அ.சா.12 | 08.04.2025 | இல்லை |
| | | அ.சா.13 | 08.04.2025 | இல்லை |
| | | அ.சா.14 | 02.06.2025 | இல்லை |
| | | அ.சா.15 | 02.06.2025 | இல்லை |
| | | அ.சா.16 | 02.06.2025 | இல்லை |
| | | அ.சா.17 | 02.06.2025 | இல்லை |
| | | அ.சா.18 | 02.06.2025 | இல்லை |
| | | அ.சா.19 | 23.06.2025 | இல்லை |
| | | அ.சா.20 | 23.06.2025 | இல்லை |
| | | அ.சா.21 | 23.06.2025 | இல்லை |
| | | அ.சா.22 | 21.07.2025 | 21.07.2025 |
| | | அ.சா.23 | 21.07.2025 | இல்லை |
| | | அ.சா.24 | 28.07.2025 | இல்லை |
| | | அ.சா.25 | 12.08.2025 | இல்லை |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அ.சா.26 | 23.09.2025 | 23.09.2025 |
| | | அ.சா.27 | 13.10.2025 | 13.10.2025 |
| | | அ.சா.28 | 13.02.2026 | 13.02.2026 |
| 7. | கு.வி.மு.ச. பிரிவு 313(1) (ஆ)ன் கீழ் எதிரியிடம் கேள்வி கேட்கப்பட்ட நாள் | 24.02.2026 | | |
| 8. | தலைமறைவு எதிரி பற்றிய விவரம் | இல்லை | | |
| 9. | மேல்முறையீட்டு நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட இடைக்கால தடை உத்தரவு பற்றிய விவரங்கள் | இல்லை | | |

**தீர்ப்புரை**

2. அரசு தரப்பு வழக்கானது இந்த வழக்கின் 1ம் எதிரி பிரவீன் என்ற சகாய பிரவீன் 3ம் எதிரி ஆரோக்கியபிரபுவின் உடன்பிறந்த சகோதரர் என்றும், 2ம் எதிரி மாரிமுத்து சகாயபிரவீனின் நண்பர் என்றும், இந்த வழக்கில் இருந்து பிரித்தெடுக்கப்பட்ட SC No.506/2016 வழக்கின் 4ம் எதிரி வேல்ராஜன், 5ம் எதிரி கர்ணன் என்ற கருணாநிதி மற்றும் 6ம் எதிரி ரமேஷ்பாண்டி ஆகியோர்கள் இந்த வழக்கின் 7ம் எதிரி பாண்டி என்ற அட்டாக்பாண்டியின் உறவினர்கள் என்றும், இந்த வழக்கின் 1ம் எதிரி பிரவீன் என்ற சகாய பிரவீன் மற்றும் 3ம் எதிரி ஆரோக்கியபிரபு ஆகியோர்கள் 7ம் எதிரி பாண்டி என்ற அட்டாக் பாண்டியின் நெருங்கிய நண்பர்கள் என்றும்,

இந்நிலையில் கடந்த 2007ம் வருடம் தினகரன் பத்திரிக்கை அலுவலகத்தை தீ வைத்து மூன்று பேர் இறந்த வழக்கில் இந்த வழக்கின் 3ம் எதிரி ஆரோக்கியபிரபு மற்றும் 7ம் எதிரி பாண்டி என்ற அட்டாக்பாண்டி சம்பந்தப்பட்டுள்ளளார்கள் என்றும், தற்போது தினகரன் பத்திரிக்கை அலுவலக எரிப்பு வழக்கு நீதிமன்ற விசாரணைக்கு வருவதால் இந்த வழக்கின் 1ம் எதிரி பிரவீன் என்ற சகாய பிரவீனும், இவ்வழக்கில் பிரித்தெடுக்கப்பட்ட SC No.506/2016 வழக்கின் 5ம் எதிரி கர்ணன் என்ற கருணாநிதியும், சி–2 சுப்பிரமணியபுரம் காவல் நிலைய குற்ற எண்.68/2013, இ.த.ச. பிரிவுகள் 147, 341, 427 மற்றும் 302 வழக்கில் கைது செய்யப்பட்டு, பாளையங்கோட்டை மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ள இந்த வழக்கின் 7ம் எதிரி பாண்டி என்ற அட்டாக் பாண்டியை சந்தித்து பேசி, அவரின் அறிவுரையின் படி இந்த வழக்கின் 3ம் எதிரி ஆரோக்கியபிரபு வாதி ராமகிருஷ்ணன் என்பவரை சந்தித்து, தினகரன் பத்திரிக்கை எரிப்பு வழக்கு தற்போது நீதிமன்ற விசாரணைக்கு வருவதால் அதன் செலவுகளுக்கு பணம் பெறுவதற்காக அழகிரியை சந்திக்க ஏற்பாடு செய்யுமாறு கூறி பலமுறை முயன்றும், வாதி சந்திக்கவிடாமல் முட்டுக்கட்டை போட்டு வந்துள்ளார் என்றும், இந்த வழக்கின் 1ம் எதிரி பிரவீன் என்ற சகாய பிரவீனும், இவ்வழக்கில் பிரித்தெடுக்கப்பட்ட SC No.506/2016 வழக்கின் 5ம் எதிரி கர்ணன் என்ற கருணாநிதியும் இந்த வழக்கு 7ம் எதிரி பாண்டி என்ற அட்டாக் பாண்டியை சிறையில் சந்தித்து வாதியின் செயலைப்பற்றி கூறியுள்ளனர் என்றும், வாதி ராமகிருஷ்ணன் சி2 சுப்பிரமணியபுரம் காவல் நிலைய கொலை வழக்கில் 44வது சாட்சியாக உள்ளார் என்றும், எனவே இந்த வழக்கின்

7ம் எதிரி பாண்டி என்ற அட்டாக் பாண்டி, வாதியை சாட்சி சொல்ல விடாமல் தடுப்பதற்காகவும், வழக்கு செலவிற்கு பணம் பெற தடையாக இருப்பதாலும் வாதி ராமகிருஷ்ணனை தீர்த்துக்கட்டி விடுங்கள் என்று சொன்னதன் பேரில், 3ம் எதிரி ஆரோக்கியபிரபுவின் தலைமையில் மற்ற எதிரிகள் அனைவரும் மதுரை மாட்டுத்தாவணி, 120 அடி ரோட்டில் உள்ள அண்ணாமலை ஹோட்டல் அறை எண்.219ல் 12.11.2015ம் தேதி முதல் 21.11.2015ம் தேதி வரை ஒன்று கூடி ராமகிருஷ்ணனை எங்கு பார்த்தாலும் கொலை செய்துவிடவேண்டும் என்று கூட்டுச்சதி செய்து, கொலை செய்ய சதி திட்டம் தீட்டியுள்ளார்கள் என்றும், அதன் தொடர்ச்சியாக கடந்த 21.11.2015ம் தேதி இரவு 10.45 மணிக்கு இந்த வழக்கின் 1ம் எதிரி பிரவீன் என்ற சகாய பிரவீனும் மற்றும் 2ம் எதிரி மாரிமுத்துவும் TN 59 BE 1830 ஹோண்டா ட்ரீம் யுகா என்ற இருசக்கர வாகனத்தில் அழகர்கோவில் மெயின்ரோடு, கார்த்திக் தியேட்டர் எதிரே வந்தபோது, அங்கு வாதி ராமகிருஷ்ணனின் TN 59 AL 0027 என்ற வெள்ளை நிற மாருதி ஸ்விப்ட் கார் நிற்பதை பார்த்துவிட்டு, உடனே இந்த வழக்கின் 3ம் எதிரியிடம் வாதி ராமகிருஷ்ணன் குரு சலூான் கடையில் முடி வெட்டிக் கொண்டிருக்கிறார் என்ற தகவலை கூறிவிட்டு, 2ம் எதிரி மாரிமுத்துவின் இருச்சக்கர வாகனத்தில் வீட்டுக்கு சென்ற இந்த வழக்கின் 1ம் எதிரி பிரவீன் என்ற சகாய பிரவீன், வீட்டிலிருந்து கத்தியை எடுத்துக்கொண்டு, அதே இருச்சக்கர வாகனத்தில் வந்து, 2ம் எதிரி மாரிமுத்துவை இருச்சக்கரவாகனத்துடன் ஜே.கே.ஹாஸ்பிட்டல் அருகே இருக்கச்சொல்லிவிட்டு, இந்த வழக்கின் 1ம் எதிரி பிரவீன் என்ற சகாய பிரவீன் நடந்து வந்து வாதியின் காரின் அருகே மறைந்து

கொண்டு, வாதி ராமகிருஷ்ணன் காரின் அருகே வந்து காரின் கதவை திறந்தபோது, இந்த வழக்கின் 1ம் எதிரி பிரவீன் என்ற சகாய பிரவீன் வாதியை வழிமறித்து, "ஏண்டா தாயோழி மகனே, நாங்களெல்லாம் இங்க கஷ்டப்படுகிறோம், நீ மட்டும் சொகுசாவாட இருக்கிற" என்று சத்தம் போட்டு, "இத்தோடு செத்து தொலைந்துபோடா" என்று கூறி சரமாரியாக மார்பு நேராக குத்த வந்தபோது, வாதி தனது இரண்டு கைகளால் தடுக்க, அதன்பிறகு இந்த வழக்கின் 1ம் எதிரி பிரவீன் என்ற சகாய பிரவீன் சரமாரியாக குத்தியதில் வாதியின் வலது கழுத்து, வலது, இடது கைகள், இடது கை மோதிரவிரல் ஆகிய இடங்களில் வெட்டுகாயமும், வயிற்றில் குத்துக்காயமும் ஏற்படுத்தி கொலை செய்ய முயற்சி செய்தார் என்றும், அப்போது இந்த வழக்கின் 1ம் எதிரி பிரவீன் என்ற சகாய பிரவீனை பிடிக்க முயன்ற சாட்சிகளை "என்னை யாராவது பிடிக்க முயன்றால் உங்களையெல்லாம் குத்தி கொல்லாமல் விடமாட்டேன்" என்று கொலை மிரட்டல் செய்துவிட்டு 2ம் எதிரி மாரிமுத்துவுடன் இருச்சக்கர வாகனத்தில் தப்பிச்சென்று மீண்டும் ஹோட்டலுக்கு சென்று அங்கு இருந்த மற்ற எதிரிகளிடம் இந்த தகவலை கூறியதால், இந்த வழக்கின் எதிரிகள் மற்றும் இவ்வழக்கில் இருந்து பிரித்தெடுக்கப்பட்ட SC No.506/2016 வழக்கின் எதிரிகள் மீது இ.த.ச.பிரிவுகள் 341, 294(b), 307, 120(b), 506(ii) மற்றும் உ/இ 34, 149 இ.த.ச–ன் கீழும், இந்த வழக்கின் 7ம் எதிரி பாண்டி என்ற அட்டாக்பாண்டி என்பவர் இ.த.ச.பிரிவு 109 உ/இ 149 இ.த.ச கீழும் தண்டிக்கதக்க குற்றம் புரிந்ததாக இ–1 கோ.புதுார் காவல் நிலைய ஆய்வாளர் அவர்கள் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

3. இந்த வழக்கினை மதுரை, நீதித்துறை நடுவர் எண்.6 அவர்கள் முதல் நிலை பதிவேடு வழக்கு எண்.129/2016 ஆக கோப்பிற்கு எடுத்துக்கொண்டு, இந்த வழக்கின் எதிரிகளுக்கு கு.வி.மு.ச. பிரிவு 207ன் படி வழங்கப்பட வேண்டிய வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தையும் இலவசமாக வழங்கிய பின்னர் இந்த வழக்கானது அமர்வு நீதிமன்றத்தால் மட்டுமே விசாரிக்கத்தக்கது என்பதால் மாண்புமிகு மதுரை முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றத்திற்கு பணிந்து அனுப்பி வைக்கப்பட்டிருந்ததில் அந்த வழக்கு அமர்வு வழக்கு எண்.456/2016–ஆக கோப்பிற்கு எடுத்துக் கொண்டு பின் விசாரணைக்காக இந்த நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

4. மேலும் எதிரிகள் இந்நீதிமன்றத்தில் ஆஜரானதும் இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டு, வழக்காவணங்களை ஆராய்ந்து குற்றச்சாட்டுகள் வனைந்து வினவ முதல்நிலை நோக்கு தென்பட்டதால் கடந்த 04.01.2019ம் தேதி 1ம் எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 120(B), 341, 294(b), 307 மற்றும் 506(ii)–ன் கீழும், 2ம் எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 120(B), மற்றும் 307 உ/இ 34 –ன் கீழும், 3ம் எதிரி மீது இ.த.ச. பிரிவு 120(B) –ன் கீழும், கடந்த 06.09.2019ம் தேதி 7ம் எதிரி மீது இ.த.ச.பிரிவு 120(B) மற்றும் 149, உ/இ 34, 109 இ.த.ச.ன் கீழும் குற்றச்சாட்டுக்கள் வனையப்பட்டுள்ளன. பின்னர், ஆவணங்களை மீண்டும் பரிசீலனை செய்ததில், கடந்த 26.11.2024ம் தேதி 1ம் எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 120(B), 341, 294(b), 307 மற்றும் 506(ii)–ன் கீழும், 2ம் எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 120(B), 341 உ/இ

120(B), 294(b) உ/இ 120(B), 307 உ/இ 120(B) மற்றும் 506(ii) உ/இ 120(B)–ன் கீழும், 3ம் எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 120(B), 341 உ/இ 120(B), 294(b) உ/இ 120(B), 307 உ/இ 120(B) மற்றும் 506(ii) உ/இ 120(B)–ன் கீழும், 7ம் எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 120(B) உ/இ 109, 341 உ/இ 120(B) உ/இ 109, 294(b) உ/இ 120(B) உ/இ 109, 307 உ/இ 120(B) உ/இ 109 மற்றும் 506(ii) உ/இ 120(B) உ/இ 109–ன் கீழும், எதிரிகளின் மீது குற்றச்சாட்டுகள் மாற்றி வனையப்பட்டு, விளக்கி வினவ எதிரிகள் குற்றவாளிகள் இல்லை என்று குற்றச்சாட்டுகளை மறுத்ததின் பேரில் அரசுத்தரப்பு சாட்சிகள் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

5. இவ்வழக்கில் அரசுதரப்பில் மொத்தம் அ.சா.1 முதல் அ.சா.28 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.19 வரையான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. சான்றுப்பொருள் சா.பொ.1 முதல் சா.பொ.4 வரை குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**6. அரசுதரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் மற்றும் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களில் இருந்து புனலாகும் அரசுதரப்பு வழக்கின் சுருக்கமாவது:**

இவ்வழக்கில் கடந்த 2015ம் ஆண்டு காவல் ஆய்வாளர் அ.சா.27 திருமதி.சுஜாதா அவர்கள் புதூர் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியிலிருந்த போது ஆய்வாளரின் உத்தரவுப்படி, மதுரை அப்போலா மருத்துவமனை சென்று, அங்கு சிகிச்சையிலிருந்து அ.சா.1 ராமகிருஷ்ணன் என்பவரை விசாரித்து,

அவர் கொடுத்த அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலத்தை பதிவு செய்து, நிலையம் வந்து, காவல் நிலைய குற்ற எண்.1017/2015 இ.த.ச பிரிவுகள் 341, 294(b), மற்றும் 307 இ.த.ச.–ன் கீழ் அ.சா.ஆ.10 முதல் தகவல் அறிக்கை 22.11.2015ம் தேதி 10.30 மணிக்கு பதிவு செய்து, புகார் வாக்குமூலத்தின் அசல் மற்றும் முதல் தகவல் அறிக்கை ஆகியவற்றை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தும் வழக்கை மேல் விசாரணைக்காக காவல் ஆய்வாளர் பார்வைக்கு வைத்துள்ளார். இந்த வழக்கை காவல் ஆய்வாளர் அ.சா.28 திரு.சக்கரவர்த்தி விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, அன்றையதினம் 12.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சி எண்.7 முருகானந்தம் மற்றும் அ.சா.7 கார்த்திக்கேயன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு அன்றைய தினம் 12.00 மணிக்கு அ.சா.ஆ.11 பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ.12 மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். மேலும் சம்பவ இடத்தில் மேற்கண்ட சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றப்பட்ட TN 59 AI 0027 என்ற மாருதி ஸ்விப்ட் வெள்ளை நிற காரை அ.சா.ஆ.13 அத்தாட்சி மூலம் கைப்பற்றியுள்ளார். இந்த வழக்கின் 1ம் எதிரி பிரவீன் என்ற சகாய பிரவீன் மற்றும் 2ம் எதிரி மாரிமுத்து ஆகியோர்களை 22.11.2015ம் தேதி 16.00 மணிக்கு கைது செய்து அன்றைய தினமே சாட்சிகள் தல்லாகுளம், சாத்தமங்கலம் உள்வட்டம் கிராம நிர்வாக அலுவலர் சாட்சி எண்.9 முத்துமொழி மற்றும் தல்லாகுளம், சாத்தமங்கலம் கிராம உதவியாளர் அ.சா.8 சந்தான முருகேசன் ஆகியோர் முன்னிலையில் 1ம் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பெற்றுள்ளார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.8 ஆகும் மற்றும்

அன்றைய தினம் 17.00 மணிக்கு 1ம் எதிரி பிரவீன் என்ற சகாய பிரவீன் ஆஜர் செய்த சா.பொ.3 வெள்ளை நிற நோக்கியா செல்போன் ஒன்று மற்றும் சா.பொ.4 கருப்பு கலர் ஹோண்டா ஷைன் இருச்சக்கர வாகனம் ஆகியவற்றை அ.சா.ஆ.5 அத்தாட்சியில் கைப்பற்றியுள்ளார். மேலும் 1ம் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் சாட்சிகளுடன் சென்று, அன்றையதினம் 18.00 மணிக்கு வண்டியூர் ரிங் ரோடு பிரிவில் உள்ள பழைய மோட்டார் ரூம் பின்புறம் எதிரி எடுத்து ஆஜர் செய்த சா.பொ.1 சுமார் 36 செ.மீ. நீளமுள்ள மரக்கைபிடியுடன் கூடிய கத்தி ஒன்று, சா.பொ.2 சுமார் 35 செ.மீ தோலால் செய்யப்பட்ட கத்தி உறை ஒன்றை கைப்பற்றியுள்ளார். அன்றையதினம் 19.00 மணிக்கு மேற்படி எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார் மற்றும் அ.சா.1 ராமகிருஷ்ணன், அ.சா.2 அர்ஜுனன், அ.சா.3 அன்பரச பாண்டி, அ.சா.4 ராஜ்மோகன், அ.சா.5 நியாஸ்கான், அ.சா.15 முன்னமலை மற்றும் அ.சா.19 ரங்கநாதன் ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்பு 21.1.2013ம் தேதி அ.சா.6 ஈஸ்வரன், சார்பு ஆய்வாளர் மாதவன் மற்றும் தலைமை காவலர் அ.சா.22 சாம்சன் குணராஜ் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். இந்த வழக்கின் 3ம் எதிரி ஆரோக்கியபிரவை கடந்த 25.11.2015ம் தேதி காலை 11.30 மணிக்கு கற்பகநகர் 10வது தெருவில் வைத்து கைது செய்து காவல் நிலையம் கொண்டு வந்து, நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தும், அ.சா.9 மணிமாறன் மற்றும் அ.சா.10 மகேஷ்வரன் ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். மேலும் 10.12.2015ம் தேதி இந்த வழக்கின் 7ம் எதிரி பாண்டி என்ற

அட்டாக்பாண்டி என்பவருக்கு PT வாரண்ட் வழங்க நீதித்துறை நடுவர் எண்.6–ல் வேண்டுகோள் கடிதம் கொடுத்தும், 7ம் எதிரி சிறையில் இருப்பதற்கான சான்று மற்றும் அவரை பார்த்த பார்வையாளர்களின் விபரங்கள் அடங்கிய அறிக்கை கிடைக்கப்பெற்று அ.சா.23 சரவணராஜ், சிறப்பு சார்பு ஆய்வாளர் மூலம் நீதித்துறை நடுவர் எண்.6 மதுரை அவர்களுக்கு அனுப்பி வைத்துள்ளார் மற்றும் அ.சா.1 ராமகிருஷ்ணன் என்பவரை 23.12.2015ம் தேதி விசாரணை செய்த மறு வாக்குமூலம் பதிவு செய்தும், அ.சா.25 காளிமுத்து, சிறப்பு சார்பு ஆய்வாளர் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். மேலும் 11.01.2016ம் தேதி சாட்சி எண்.28 ரமேஷ்குமார் என்பவரை இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட TN 59 BE 1830 Honda shine என்ற வாகனத்தின் பதிவு சான்று வழங்கியது பற்றி வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். அவர் வழங்கிய அறிக்கை அ.சா.ஆ.15 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அன்றையதினமே மதுரை தெற்கு வட்டார போக்கு வரத்து கண்காணிப்பாளர் அ.சா.24 விஷ்ணுகாந்த் என்பவரை TN 59 AL 0027 Maruti Swift காரின் பதிவு சான்றிதழ் வழங்கியது பற்றி விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். அவர் வழங்கிய சான்று அ.சா.ஆ,16 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கில் 1ம் எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட சொத்துக்கள் மற்றும் சம்பவ இடத்தில் அத்தாட்சி மூலம் கைப்பற்றப்பட்ட மாருதி ஸ்விப்ட் கார் ஆகியவற்றை அ.சா.ஆ.17 படிவங்கள் 91 (3 எண்ணங்கள்) மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். மேலும் 28.11.2015ம் தேதி சட்ட பிரிவை மாற்றக்கோரி சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.18 நீதித்துறை நடுவர் எண்.6 மதுரை அவர்களிடம்

சமர்ப்பித்துள்ளார். மேலும் 19.01.2016ம் தேதி அ.சா.11 சுரேஷ் என்பவரை நீதித்துறை நடுவர் எண்.2, மதுரை அவர்கள் முன்பாக ஆஜர் செய்து, அ.சா.ஆ.19 வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். இவ்வழக்கில் காயம்பட்ட வாதி ராமகிருஷ்ணனுக்கு சிகிச்சையளித்த மருத்துவர் அ.சா.26 டாக்டர்.ரிஸ்வான் அகமது என்பவர் தனது முதல் விசாரணையில் தான் மதுரை அப்போலா மருத்துமனையில் அவசர சிகிச்சை பிரிவில் மருத்துவராக இருந்தபோது, ராமகிருஷ்ணன் என்பவரை சிகிச்சைக்காக கத்தி குத்து காயங்களுடன் அழைத்த வந்தனர் என்றும், அவர் தன்னிடம் தன்னை ஒரு நபர் கூர்மையான பொருளால் குத்தியதாக சொன்னார் என்றும், அவருக்கு இடது பக்க கை, இடது பக்க முழங்கை, இடது கால், இடது பக்க மார்பக பகுதி, வலது பக்க உள்ளங்கை மற்றும் வயிற்று பகுதி ஆகிய இடங்களில் கத்தி குத்துகளால் ஏற்பட்ட காயங்கள் ஏற்பட்டிருந்தன என்றும், அவருக்கு முதல் உதவி சிகிச்சை செய்து, உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டார் என்றும் அ.சா.ஆ.9 காயச்சான்று வழங்கியதாகவும் குறிப்பிட்டுள்ளார். இந்த வழக்கின் விசாரணையை முடித்து 1ம் எதிரி மீது இ.த.ச.பிரிவுகள் 341, 294(b), 307 மற்றும் 506(ii) –ன் கீழும், 1 முதல் 7வது எதிரிகள் மீது இ.த.ச.பிரிவுகள் 341, 294(b), 307 மற்றும் 506(ii), 120(b) உ/இ 31, 149 இ.த.ச–ன் கீழும், 7ம் எதிரி மீது இ.த.ச.பிரிவு 109 உ/இ 149 இ.த.ச குற்ற இறுதிஅறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

7. அரசுதரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிகளுக்கு பாதகமான அம்சங்கள் குறித்து கு.வி.மு.ச. பிரிவு 313(1)

(ஆ)ன் படி கேள்வி கேட்க எதிரிகள் பொய்வழக்கு என்றும், தங்களது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் உண்டு என்றும், ஆனால் எதிரிகள் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது.

8. இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், அரசு தரப்பில் 1ம் எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 120(B), 341, 294(b), 307 மற்றும் 506(ii)–ன் கீழும், 2ம் எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 120(B), 341 உ/இ 120(B), 294(b) உ/இ 120(B), 307 உ/இ 120(B) மற்றும் 506(ii) உ/இ 120(B)–ன் கீழும், 3ம் எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 120(B), 341 உ/இ 120(B), 294(b) உ/இ 120(B), 307 உ/இ 120(B) மற்றும் 506(ii) உ/இ 120(B)–ன் கீழும், 7ம் எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 120(B) உ/இ 109, 341 உ/இ 120(B) உ/இ 109, 294(b) உ/இ 120(B) உ/இ 109, 307 உ/இ 120(B) உ/இ 109 மற்றும் 506(ii) உ/இ 120(B) உ/இ 109–ன் கீழும் சாட்டப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளானது அரசு தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் ஐயத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

**9 . பிரச்சனை** :

அரசு தரப்பு வழக்கானது இந்த வழக்கில் இருந்து பிரித்தெடுக்கப்பட்ட SC No.506/2016 வழக்கின் 4ம் எதிரி வேல்ராஜன், 5ம் எதிரி கர்ணன் என்ற கருணாநிதி மற்றும் 6ம் எதிரி ரமேஷ்பாண்டி ஆகியோர்கள் இந்த வழக்கின் 7ம் எதிரி பாண்டி என்ற அட்டாக்பாண்டியின்

உறவினர்கள் என்றும், இந்த வழக்கின் 1ம் எதிரி பிரவீன் என்ற சகாய பிரவீன் மற்றும் 3ம் எதிரி ஆரோக்கியபிரபு ஆகியோர்கள் 7ம் எதிரி பாண்டி என்ற அட்டாக் பாண்டியின் நெருங்கிய நண்பர்கள் என்றும், இந்நிலையில் கடந்த 2007ம் வருடம் தினகரன் பத்திரிக்கை அலுவலகத்தை தீ வைத்து மூன்று பேர் இறந்த வழக்கில் இந்த வழக்கின் 3ம் எதிரி ஆரோக்கியபிரபு மற்றும் 7ம் எதிரி பாண்டி என்ற அட்டாக்பாண்டி சம்பந்தப்பட்டுள்ளளார்கள் என்றும், தற்போது தினகரன் பத்திரிக்கை அலுவலக எரிப்பு வழக்கு நீதிமன்ற விசாரணைக்கு வருவதால் இந்த வழக்கின் 1ம் எதிரி பிரவீன் என்ற சகாய பிரவீனும், இவ்வழக்கில் பிரித்தெடுக்கப்பட்ட SC No.506/2016 வழக்கின் 5ம் எதிரி கர்ணன் என்ற கருணாநிதியும், சி–2 சுப்பிரமணியபுரம் காவல் நிலைய குற்ற எண்.68/2013, இ.த.ச. பிரிவுகள் 147, 341, 427 மற்றும் 302 வழக்கில் கைது செய்யப்பட்டு, பாளையங்கோட்டை மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ள இந்த வழக்கின் 7ம் எதிரி பாண்டி என்ற அட்டாக் பாண்டியை சந்தித்து பேசி, அவரின் அறிவுரையின் படி இந்த வழக்கின் 3ம் எதிரி ஆரோக்கியபிரபு வாதி ராமகிருஷ்ணன் என்பவரை சந்தித்து, தினகரன் பத்திரிக்கை எரிப்பு வழக்கு தற்போது நீதிமன்ற விசாரணைக்கு வருவதால் அதன் செலவுகளுக்கு பணம் பெறுவதற்காக அழகிரியை சந்திக்க ஏற்பாடு செய்யுமாறு கூறி பலமுறை முயன்றும், வாதி சந்திக்கவிடாமல் முட்டுக்கட்டை போட்டு வந்துள்ளார் என்றும், இந்த வழக்கின் 1ம் எதிரி பிரவீன் என்ற சகாய பிரவீனும், இவ்வழக்கில் பிரித்தெடுக்கப்பட்ட SC No.506/2016 வழக்கின் 5ம் எதிரி கர்ணன் என்ற கருணாநிதியும் இந்த வழக்கு 7ம் எதிரி பாண்டி என்ற அட்டாக் பாண்டியை சிறையில் சந்தித்து

வாதியின் செயலைப்பற்றி கூறியுள்ளனர் என்றும், வாதி ராமகிருஷ்ணன் சி2 சுப்பிரமணியபுரம் காவல் நிலைய கொலை வழக்கில் 44வது சாட்சியாக உள்ளார் என்றும், எனவே இந்த வழக்கின் 7ம் எதிரி பாண்டி என்ற அட்டாக் பாண்டி, வாதியை சாட்சி சொல்ல விடாமல் தடுப்பதற்காகவும், வழக்கு செலவிற்கு பணம் பெற தடையாக இருப்பதாலும் வாதி ராமகிருஷ்ணனை தீர்த்துக்கட்டி விடுங்கள் என்று சொன்னதன் பேரில், 3ம் எதிரி ஆரோக்கியபிரபுவின் தலைமையில் மார்ஜினில் கண்ட மற்ற எதிரிகள் அனைவரும் ஒன்று கூடி ராமகிருஷ்ணனை எங்கு பார்த்தாலும் கொலை செய்துவிடவேண்டும் என்று கூட்டுச்சதி செய்து, கொலை செய்ய சதி திட்டம் தீட்டியுள்ளார்கள் என்றும், அதன் தொடர்ச்சியாக வாதி ராமகிருஷ்ணன் காரின் அருகே வந்து காரின் கதவை திறந்தபோது, இந்த வழக்கின் 1ம் எதிரி பிரவீன் என்ற சகாய பிரவீன் வாதியை வழிமறித்து, "ஏண்டா தாயோழி மகனே, நாங்களெல்லாம் இங்க கஷ்டப்படுகிறோம், நீ மட்டும் சொகுசாவாட இருக்கிற" என்று சத்தம் போட்டு, "இத்தோடு செத்து தொலைந்துபோடா" என்று கூறி சரமாரியாக மார்பு நேராக குத்த வந்தபோது, வாதி தனது இரண்டு கைகளால் தடுக்க, அதன்பிறகு இந்த வழக்கின் 1ம் எதிரி பிரவீன் என்ற சகாய பிரவீன் சரமாரியாக குத்தியதில் வாதியின் வலது கழுத்து, வலது, இடது கைகள், இடது கை மோதிரவிரல் ஆகிய இடங்களில் வெட்டுகாயமும், வயிற்றில் குத்துக்காயமும் ஏற்படுத்தி கொலை செய்ய முயற்சி செய்தார் என்றும், அப்போது இந்த வழக்கின் 1ம் எதிரி பிரவீன் என்ற சகாய பிரவீனை பிடிக்க முயன்ற சாட்சிகளை "என்னை யாராவது பிடிக்க முயன்றால் உங்களையெல்லாம் குத்தி கொல்லாமல் விடமாட்டேன்" என்று

கொலை மிரட்டல் செய்துவிட்டு 2ம் எதிரி மாரிமுத்துவுடன் இருச்சக்கர வாகனத்தில் தப்பிச்சென்றுவிட்டார் என்பதாகும்.

10. அறிவார்ந்த குற்றவியல் கூடுதல் அரசு தரப்பு வழக்கறிஞர் 1வது எதிரி பிரவீன் என்ற சகாயபிரவீன் மற்றும் இந்த வழக்கில் இருந்து பிரித்தெடுக்கப்பட்ட SC.No.509/2016 வழக்கின் 5வது எதிரி ஆகியோர்கள் சி2 சுப்பிரமணியபுரம் காவல் நிலைய குற்ற எண்.68/13, இ.த.ச.பிரிவுகள் 147, 341, 427 மற்றும் 302 வழக்கில் கைது செய்யப்பட்டு பாளையங்கோட்டை மத்திய சிறையில் அடைக்கப் பட்டுள்ள இந்த வழக்கின் 7ம் எதிரி பாண்டி என்ற அட்டாக்பாண்டியை சந்தித்து மேற்படி வழக்கில் சாட்சி எண்.44 ஆக காட்டப்பட்டுள்ள வாதி ராமகிருஷ்ணனை சாட்சி சொல்ல விடாமல் தடுப்பதற்காகவும், தினகரன் பத்திரிக்கை அலுவலகம் எரிப்பு வழக்கு விசாரணைக்காக பணம் பெறுவதற்கு அழகிரியை சந்திக்கவிடாமல் வாதி ராமகிருஷ்ணன் முட்டுக்கட்டை போட்டு வந்ததற்காகவும், வாதி ராமகிருஷ்ணனை தீர்த்து கட்டிவிடுங்கள் என்று இந்த வழக்கின் 7ம் எதிரி பாண்டி என்ற அட்டாக்பாண்டி தூண்டியதின் பேரில், இந்த வழக்கின் 3ம் எதிரி ஆரோக்கியபிரபுவின் தலைமையில் இந்த வழக்கு எதிரிகளும், இந்த வழக்கில் இருந்து பிரித்தெடுக்கப்பட்ட S.C.No.509/2016 வழக்கில் கண்ட 4வது எதிரி வேல்ராஜன், 5வது எதிரி கர்ணன் என்ற கருணாநிதி, 6வது எதிரி ரமேஷ்பாண்டி ஆகியோர்கள் மதுரை மாட்டுத்தாவணி 120 அடி ரோட்டில் உள்ள அண்ணாமலை ஹோட்டல், அறை எண்.219ல் கடந்த 12.11.2015ம் தேதி முதல் 21.11.2015ம் தேதி வரை ஒன்று கூடி ராமகிருஷ்ணனை கொலை

செய்துவிடவேண்டும் என்று கூட்டுச்சதித்திட்டம் தீட்டி, அந்த சத்தித்திட்டத்தை நிறைவேற்றும் பொருட்டு, இந்த வழக்கின் 1ம் எதிரி பிரவீன் என்ற சகாய பிரவீன் வாதி ராமகிருஷ்ணனை குரு சலூான் கடைக்கு அருகில் வழிமறித்து, அசிங்கமாக பேசி, இத்தோடு செத்து தொலைந்து போடா என்று சொல்லி, கத்தியால் உடலில் பல இடங்களில் வெட்டுக்காயங்கள் மற்றும் குத்துக்காயங்கள் ஏற்படுத்தி கொலை செய்ய முயற்சித்துள்ளார் என்ற சங்கதியானது அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதால் இந்த வழக்கு எதிரிகள் மற்றும் இந்த வழக்கில் இருந்து பிரித்தெடுக்கப்பட்ட S.C.No.509/2016 வழக்கில் கண்ட எதிரிகளுக்கு தகுந்த தண்டனை வழங்க வேண்டுமென்று கூறி வாதிட்டார்.

11. எதிரிகள் தரப்பு அறிவார்ந்த வழக்கறிஞர்கள் இந்த வழக்கு சம்பவத்தில் காயம்பட்டதாக சொல்லப்படும் அ.சா.1 ராமகிருஷ்ணன் என்பவர் தன்னுடைய முதல் விசாரணையில், கடந்த 21.11.2015ம் தேதி புதூரில் இருந்து முடி வெட்டும் கடைக்கு சென்றுவிட்டு, வெளியில் இரவு சுமார் 10.00 மணிக்கு அந்த கடையின் வாசலில் இருந்த தனது காருக்குள் ஏறும்போது, ஆரோக்கிய பிரவீன் மற்றும் அவருடன் இருந்த மற்றொரு நபரும் சேர்ந்து, ஆரோக்கிய பிரவீன் ஒரு பெரிய வாளை வைத்து தன்னை வயிற்றில் மற்றும் இடதுகை புஜத்திற்கு கீழ் மற்றும் இடது நெஞ்சு பகுதி மற்றும் தொப்புளுக்கு கீழே உள்ள வயிற்று பகுதி ஆகிய இடங்கயில் மேற்படி வாளை வைத்து குத்தி காயத்தை ஏற்படுத்தியதாக குறிப்பிட்டுள்ளார். இந்த வழக்கில் 1ம் எதிரியின் பெயர் பிரவீன் என்ற சகாய பிரவீன், ஆனால், அ.சா.1 ராமகிருஷ்ணன்

தன்னுடைய முதல் விசாரணையில் ஆரோக்கிய பிரவீன் என்பவர் தன்னை பெரிய வாளை வைத்து குத்தி காயப்படுத்தியதாக குறிப்பிட்டுள்ளார். மேலும் அரசு தரப்பில் அ.சா.1 ராமகிருஷ்ணனை 1ம் எதிரி பிரவீன் என்ற சகாயபிரவீன் தாக்கியதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த நிலையில் அ.சா.1 ராமகிருஷ்ணன் தன்னை கத்தி/வாளால் தாக்கிய நபர் யார் என்று உறுதியாக தெரியாத காரணத்தினால்தான் தன்னை தாக்கியதாக சொல்லப்படும் நபரின் பெயரை மாற்றி குறிப்பிட்டுள்ளார் என்பது மட்டுமின்றி தன்னை தாக்கியதாக சொல்லப்படும் நபர் யார் என்று அ.சா.1 ராமகிருஷ்ணனுக்கு தெரியவில்லை என்பது புலனாகிறது என்றும், இந்த வழக்கில் விசாரிக்கப்பட்ட காவல் ஆய்வாளர் அ.சா.28 திரு.சக்கரவர்த்தி தன்னுடைய குறுக்கு விசாரணையில், அ.சா.1 ராமகிருஷ்ணனிடம் மருத்துவர் அ.சா.26 திரு. ரிஸ்வான் அகமது  கேட்டபோது, தன்னை அடையாளம் தெரியாத நபர் குத்தியதாக வாக்குமூலம் கொடுத்ததாக குறிப்பிட்டுள்ளார். எனவே, அ.சா.1 ராமகிருஷ்ணனுக்கு தன்னை யார் கத்தி/வாளால் தாக்கினார்கள் என்பதை பொருத்த அளவில் தெரியவில்லை என்பது மட்டுமின்றி, பின் யோசனையில் எதிரிகள் மீது பொய்வழக்கு புனையப்பட்டுள்ளது என்பது புலனாகிறது என்பது மட்டுமின்றி, அரசு தரப்பில் முன்னிலைப்படுத்துப்படுவது போல் இந்த வழக்கின் 1ம் எதிரி மற்றும் இவ்வழக்கில் இருந்து பிரித்தெடுக்கப்பட்ட S.C.No.509/2016 வழக்கின் 5ம் எதிரி கர்ணன் என்ற கருணாநிதி ஆகியோர்கள் இந்த வழக்கின் 7ம் எதிரி பாண்டி என்ற அட்டாக்பாண்டியை பாளையங்கோட்டை மத்திய சிறையில் சந்தித்து, அவர் சொன்னதின் பேரில் அ.சா.1 ராமகிருஷ்ணனை கொலை

செய்வதற்காக, மதுரை மாட்டுத்தாவணி 120 அடி ரோட்டில் உள்ள அண்ணாமலை ஹோட்டல் அறை எண்.219ல் சதித்திட்டம் தீட்டினார்கள் என்ற சங்கதியானது நிரூபிக்கப்படவில்லை என்றும், எனவே சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து அவர்களை இந்த வழக்கு சம்பந்தப்பட்ட குற்றச்சாட்டுகளிலிருந்து விடுதலை செய்ய வேண்டுமென்று கூறி வாதிட்டார்கள்.

12. இரு தரப்பு வாதங்களும் பரிசீலிக்கப்பட்டது. அரசு தரப்பு வழக்கானது இந்த வழக்கின் 1ம் எதிரி பிரவீன் என்ற சகாய பிரவீன் மற்றும் இவ்வழக்கில் இருந்து பிரித்தெடுக்கப்பட்ட S.C.No.509/2016 வழக்கின் 5ம் எதிரி கர்ணன் என்ற கருணாநிதி ஆகியோர்கள் இந்த வழக்கின் 7ம் எதிரி பாண்டி என்ற அட்டாக்பாண்டியை பாளையங்கோட்டை மத்திய சிறையில் சந்தித்து, அவர் சொன்னதின் பேரில் அ.சா.1 ராமகிருஷ்ணனை கொலை செய்வதற்காக மதுரை மாட்டுத்தாவணி 120 ரோட்டில் அமைந்துள்ள அண்ணாமலை ஹோட்டல் அறை எண்.219ல், இந்த வழக்கின் 3ம் எதிரி ஆரோக்கியபிரபுவின் தலைமையில் இந்த வழக்கு எதிரிகள் மற்றும் இவ்வழக்கில் இருந்து பிரித்தெடுக்கப்பட்ட S.C.No.509/2016 வழக்கின் எதிரிகள் சதித்திட்டம் தீட்டினார்கள் என்ற சங்கதியானது அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதை நீதியின் பொருட்டு முதலில் பரிசீலிக்க வேண்டியது அவசியமாகிறது.

13. இந்த வழக்கின் 3ம் எதிரி ஆரோக்கியபிரபுவின் தலைமையில் இந்த வழக்கின் எதிரிகள், இவ்வழக்கில் இருந்து பிரித்தெடுக்கப்பட்ட

S.C.No.509/2016 வழக்கின் 4ம் எதிரி வேல்ராஜன், 5ம் எதிரி கர்ணன் என்ற கருணாநிதி, 6ம் எதிரி ரமேஷ்பாண்டி ஆகியோர்கள் இந்த வழக்கின் 7வது எதிரி பாண்டி என்ற அட்டாக்பாண்டி சொன்னதின் பேரில் மதுரை மாட்டுத்தாவணி 120 அடி ரோட்டில் உள்ள அண்ணாமலை ஹோட்டல், அறை எண்.219ல் கடந்த 12.11.2015ம் தேதி முதல் 21.11.2015ம் தேதி வரை ஒன்று கூடி அ.சா.1 ராமகிருஷ்ணனை கொலை செய்ய சதித்திட்டம் தீட்டினார்கள் என்ற சங்கதியானது அரசு தரப்பில் முன்னிலைபடுத்தப்பட்டுள்ளது. மேற்படி சங்கதியினை நிரூபிப்பதற்கு விசாரிக்கப்பட்ட அண்ணாமலை ஹோட்டல் மேலாளர் அ.சா.11 சுரேஷ் தன்னுடைய முதல் விசாரணையில், இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட நபர்களை பற்றி தனக்குத் தெரியாது என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் சாட்சியமளித்துள்ளார் என்பது மட்டுமின்றி, நீதித்துறை நடுவர் எண். 2 மதுரை அவர்களிடம் குவிமுச பிரிவு 164(5) வாக்குமூலம் கொடுத்ததாக சாட்சியமளிக்கவில்லை மற்றும் அண்ணாமலை ஹோட்டல் ரூம் சர்வீஸ்-ல் வேலை பார்த்த அ.சா.12 அழகுராஜா தனது முதல் விசாரணையில், தனக்கு இந்த வழக்கு பற்றிய நபர்களை தெரியாது என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் சாட்சியமளித்துள்ளார். இந்நிலையில் இந்த வழக்கு 1, 2 மற்றும் 3 எதிரிகள் மற்றும் இந்த வழக்கில் இருந்து பிரித்தெடுக்கப்பட்ட S.C.No.509/2016 வழக்கின் 4, 5 மற்றும் 6 எதிரிகள் அண்ணாமலை ஹோட்டலில் தங்கி சதித்திட்டம் தீட்டியது சம்பந்தமாக அரசு தரப்பில் எந்த ஆவணமும் தாக்கல் செய்யப்படவில்லை. எனவே, இந்த வழக்கின் 1ம் எதிரி பிரவீன் என்ற சகாய பிரவீன், 2ம் எதிரி மாரிமுத்து,

3ம் எதிரி ஆரோக்கியபிரபு மற்றும் இவ்வழக்கில் இருந்து பிரித்தெடுக்கப்பட்ட S.C.No.509/2016 வழக்கின் 4ம் எதிரி வேல்ராஜன், 5ம் எதிரி கர்ணன் என்ற கருணாநிதி, 6ம் எதிரி ரமேஷ்பாண்டி ஆகியோர்கள் இந்த வழக்கு 7வது எதிரி பாண்டி என்ற அட்டாக் பாண்டியின் அறிவுறுத்தல் மற்றும் தூண்டுதலின் பேரில் மேற்படி ஹோட்டலில் தங்கி அ.சா.1 ராமகிருஷ்ணனை கொலை செய்தவற்காக சதித்திட்டம் தீட்டினார்கள் என்று நிரூபிக்க எந்த சாட்சியமும் இந்த வழக்கில் அமையவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

14. இந்த வழக்கில் விசாரிக்கப்பட்ட அ.சா.22 தலைமை காவலர் திரு.சாம்சன் குணராஜ் என்பவர் தன்னுடைய முதல் விசாரணையில், கோ.புதூர் காவல் ஆய்வாளர் அவர்களின் உத்தரவுப்படி தபால் பெற்று, பாளையங்கோட்டை மத்திய சிறையில் தபாலை கொடுத்ததாகவும், பாளையங்கோட்டை மத்திய சிறையில் இருந்து விபரங்கள் அடங்கிய தபால் எதுவும் வாங்கிவரவில்லை என்றும் தெரிவித்துள்ளார் என்பது மட்டுமின்றி, அ.சா.23 பாளையங்கோட்டை மத்திய சிறையின் அலுவலக மேலாளர் திரு.சரவணராஜா தனது முதல் விசாரணையில், பாளையங்ககோட்டை மத்திய சிறையில் 7ம் எதிரி அட்டாக்பாண்டியை சந்தித்தவர்களின் விவரங்கள் பற்றிய பட்டியலை தான் தயார் செய்யவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளார். இந்நிலையில் இந்த வழக்கில் அரசு தரப்பில் முன்னிலைப்படுத்துவது போல், இந்த வழக்கின் 1ம் எதிரி பிரவீன் என்ற சகாய பிரவீன் மற்றும் இவ்வழக்கில் இருந்து பிரித்தெடுக்கப்பட்ட S.C.No.509/2016 வழக்கின் 5ம் எதிரி கர்ணன்

என்ற கருணாநிதி ஆகியோர்கள் இந்த வழக்கின் 7ம் எதிரி பாண்டி என்ற அட்டாக்பாண்டியை பாளையங்கோட்டை மத்திய சிறையில் சந்தித்தார்கள் என்ற சங்கதியானது ஆவணங்கள் மற்றும் வாய்மொழி சாட்சியங்களின் அடிப்படையில் அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை என்பது புலனாகிறது.

15. எனவே இந்த வழக்கில் முன்னிலைப்படுத்தப்பட்ட சாட்சிகளை ஒருசேர பரிசீலிக்கும்போது, இந்த வழக்கின் எதிரி பிரவீன் என்ற சகாயபிரவீன் மற்றும் இவ்வழக்கில் இருந்து பிரித்தெடுக்கப்பட்ட S.C.No.509/2016 வழக்கின் 5ம் எதிரி கர்ணன் என்ற கருணாநிதி ஆகியோர்கள் இந்த வழக்கின் 7ம் எதிரி பாண்டி என்ற அட்டாக்பாண்டியை பாளையங்கோட்டை மத்திய சிறையில் சந்தித்து அவருடைய அறிவுறுத்தலின் பேரில் அ.சா.1 ராமகிருஷ்ணனை கொலை செய்வதற்காக இந்த வழக்கின் எதிரிகள் மற்றும் இவ்வழக்கில் இருந்து பிரித்தெடுக்கப்பட்ட S.C.No.509/2016 வழக்கின் 4ம் எதிரி வேல்ராஜன், 5ம் எதிரி கர்ணன் என்ற கருணாநிதி, 6ம் எதிரி ரமேஷ்பாண்டி ஆகியோர்கள் மதுரை, மாட்டுத்தாவணி 120 ரோட்டில் உள்ள அண்ணாமலை ஹோட்டல், அறை எண்.219ல் கடந்த 12.11.2015ம் தேதி முதல் 21.11.2015ம் தேதி வரை கூட்டு சதித்திட்டத்தில் ஈடுபட்டார்கள் என்ற சங்கதியானது அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

16. மேலும் இந்த வழக்கு சம்பவத்தில் காயம்பட்டதாக சொல்லப்படும் அ.சா.1 ராமகிருஷ்ணன் தன்னுடைய முதல் விசாரணையில் தன்னை ஆரோக்கியபிரவீன் என்பவரும் அவருடன் இருந்த மற்றொரு நபரும் சேர்ந்து வாளால் தன்னுடைய உடலில் வெட்டியும், குத்தியும் காயங்கள் ஏற்படுத்தியதாக குறிப்பிட்டுள்ளார். ஆனால் அரசு தரப்பில் இந்த வழக்கின் 1ம் எதிரி பிரவீன் என்ற சகாய பிரவீன் அ.சா.1 ராமகிருஷ்ணனை கத்தியால் குத்தி மற்றும் வெட்டி காயத்தை ஏற்படுத்தியதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த வழக்கின் 1ம் எதிரியின் பெயர் பிரவீன் என்ற சகாய பிரவீன். ஆனால், அ.சா.1 ராமகிருஷ்ணன் தன்னை ஆரோக்கிய பிரவீன் என்பவர் பெரிய வாளால் வெட்டியும் குத்தியும் காயங்களை ஏற்படுத்தியதாக முதல் விசாரணையில் குறிப்பிட்டுள்ளார். மேலும் மதுரை அப்போலா மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் மருத்துவராக இருந்த அ.சா.26 திரு.ரிஸ்வான் அகமது என்பவர் தன்னடைய குவிமுச 161(3) வாக்குமூலத்தில், அ.சா.1 ராமகிருஷ்ணனை விசாரித்ததில் கடந்த 21.11.2015ம் தேதி இரவு 11 மணியளவில் புதூர் ஏரியாவில் வைத்து தனக்கு தெரியாத நபர் ஒருவர் தன்னை கத்தியால் பல இடங்களில் குத்தி காயங்களை ஏற்படுத்தியதாக கூறினார் என்று குறிப்பிட்டுள்ளார் என்பது மட்டுமின்றி, மதுரை மாநகர், கோ.புதூர் சட்டம் ஒழுங்கு காவல் நிலைய ஆய்வாளர் அ.சா.28 திரு.சக்கரவர்த்தி தனது சாட்சியத்தில், அ.சா.26 மருத்துவர் திரு.ரிஸ்வான் அகமதுவை தான் விசாரித்தபோது, அ.சா.1 ராமகிருஷ்ணன் தன்னை அடையாளம் தெரியாத நபர் குத்தியதாக தன்னிடம் வாக்குமூலம் கொடுத்ததாக தெரிவித்ததாக குறிப்பிட்டுள்ளார். மேலும் அ.சா.1 ராமகிருஷ்ணனின் சகோதரர் அ.சா.10

மகேஷ்வரன் தன்னுடைய 1 மற்றும் 3ம் எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணையில், மனோஜ் என்பவர் போன் செய்து தனது அண்ணனை யாரோ கத்தியால் குத்திவிட்டதாக போலீஸ் விசாரணையின் போது தெரிவித்ததாக ஒத்துக்கொண்டு சாட்சியமளித்துள்ளார். மேலும் அ.சா.10 மகேஷ்வரன் தன்னுடைய அண்ணன் பாதுகாப்பிற்காக துப்பாக்கி உரிமம் வாங்கிருந்தார் என்று குறிப்பிட்டுள்ளார். இந்நிலையில், அ.சா.10 மகேஷ்வரன் குறுக்கு விசாரணையில் ஒத்துக்கொண்ட சங்கதிகளை பரிசீலிக்கும் போது, தாக்குதல் நடந்த சமயத்தில் அ.சா.1 ராமகிருஷ்ணனை யார் தாக்கினார்கள் என்பது தெரியவில்லை என்பது மட்டுமின்றி, அ.சா.1 ராமகிருஷ்ணன் பாதுகாப்பிற்காக துப்பாக்கி உரிமம் வைத்துள்ளதிலிருந்து அதிகப்படியான விரோதிகள் சம்பவ சமயத்தில் அவருக்கு இருந்திருக்க வாய்ப்புள்ளது. இந்த நிலையில் இந்த வழக்கில் முன்னிலைப்படுத்தப்பட்ட சாட்சியங்களை குறிப்பாக அ.சா.26 மருத்துவர் திரு.ரிஸ்வான்அகமதுவின் குவிமுச 161(3) வாக்குமூலத்தினையும், அ.சா.28 காவல் ஆய்வாளர் திரு.சக்கரவர்த்தி தனது குறுக்கு விசாரணையில் ஒத்துக்கொண்டுள்ள சங்கதியையும் கருத்தில் கொண்டு பரிசீலிக்கும் போது, அ.சா.1 ராமகிருஷ்ணனுக்கு தன்னை தாக்கியதாக சொல்லும் நபர் யார் என்று தெரியவில்லை என்பது மட்டுமின்றி, இந்த வழக்கில் அரசு தரப்பில் முன்னிலைப்படுத்துவது போல் 1ம் எதிரி பிரவீன் என்ற சகாய பிரவீன் கத்தியால் குத்துக்காயங்கள் மற்றும் வெட்டுக்காயங்களை உண்மையிலேயே அ.சா.1 ராமகிருஷ்ணனுக்கு ஏற்படுத்தியிருந்தால், அவர் மருத்துவரிடம் தன்னை தெரிந்த நபர் தாக்கியதாக

குறிப்பிட்டிருப்பார். ஆனால் தன்னை தெரிந்தநபர் தாக்கியதாக குறிப்படவில்லை என்பது மட்டுமின்றி, தெரியாத நபர் தாக்கியதாக குறிப்பிட்டுள்ளார். இந்நிலையில், கடந்த 22.11.2015ம் தேதி 10.30 மணிக்கு அ.சா.1 ராமகிருஷ்ணன் கொடுத்ததாக சொல்லப்படும் புகார் வாக்குமூலத்தில், 1ம் எதிரி மறைத்து வைத்திருந்த கத்தியால் தன்னை தாக்கியதாக குறிப்பிட்டுள்ளது பின்யோசனையுடன் குறிப்பிட வாய்ப்புள்ளதால் அந்த சங்கதிக்கு இந்த வழக்கில் எந்த முக்கியத்துவமும் கொடுக்க இயலாது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

17. இந்த வழக்கில் விசாரிக்கப்பட்ட அ.சா.1 ராமகிருஷ்ணன் தன்னுடைய முதல் விசாரணையில், சம்பவ இடத்திலிருந்து முதலில் தன்னை இருச்சக்கர வாகனத்தில் வைத்து, மதுரை கே.புதூரில் உள்ள தேவதாஸ் மருத்துவமனையில் கொண்டு சேர்த்ததாகவும், அங்கு தனக்கு ஏற்பட்ட காயத்திற்கு முதல் உதவி சிகிச்சை அளித்து, மேல் சிகிச்சைக்காக மதுரை, அப்போலா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டதாக குறிப்பிட்டுள்ளார். மேலும், இந்த வழக்கின் 1, 2 மற்றும் 3 எதிரிகள் தரப்பில் முதல் நிலை பதிவேட்டு நீதிமன்றத்தில் மதுரை, தேவதாஸ் மருத்துவமனையில் அ.சா.1 ராமகிருஷ்ணன் சம்பந்தப்பட்ட AR Copy மற்றும் MLC அறிக்கையின் நகல் கோரி மனு தாக்கல் செய்யப்பட்டு, மேற்படி ஆவணங்களானது வழக்குடன் தாக்கல் செய்யாததால் வழங்க இயலாது என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேலும், இந்த வழக்கின் 1ம் எதிரி தரப்பில் இந்த நீதிமன்றத்தில் மதுரை, தேவதாஸ் மருத்துவமனையில் அ.சா.1 ராமகிருஷ்ணனுக்கு சிகிச்சை

அளித்தது சம்பந்தமான விபத்துப்பதிவேட்டினை ஆஜர் செய்து சாட்சியமளிப்பதற்கு குவிமுச பிரிவு 91-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. ஆனால், இந்த வழக்கில் மேற்படி ஆவணம் ஆஜர் படுத்தப்பட்டு, சம்பந்தப்பட்ட மருத்துவர் இந்த வழக்கு 1ம் எதிரி தரப்பில் விசாரிக்கப்படவில்லை. இந்நிலையில் இந்த வழக்கில், கே.புதூரில் உள்ள மதுரை, தேவதாஸ் மருத்துவமனையில் அ.சா.1 ராமகிருஷ்ணன் சம்பந்தப்பட்ட மருத்துவ ஆவணங்கள் மற்றும் வழக்கு சம்பவம் குறித்து அ.சா.1 ராமகிருஷ்ணன் முதலில் மருத்துவரிடம் கொடுத்த வாக்குமூலம் அரசு தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை என்பது புலனாகிறது. எனவே இந்த சங்கதியானது அரசு தரப்பு வழக்கின் அடிப்படையை பொறுத்த வகையில் சந்தேகத்திற்கு இடமளிக்கும் வகையில் அமைந்துள்ளது.

18. மேலும் இந்த வழக்கு சம்பவத்தை கண்ணுற்றதாக அரசு தரப்பில் அ.சா.2 அர்ஜுனன் மற்றும் அ.சா.3 அன்பரச பாண்டி ஆகியோர்கள் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளனர், அதில் அ.சா.2 அர்ஜுனன் தன்னுடைய முதல் விசாரணையில், தன்னுடைய கடைக்குள் இருந்து கண்ணாடி வழியாக எதேச்சையாக தான் பார்க்கும்போது, அ.சா.1 ராமகிருஷ்ணன் வடக்கிலிருந்து தெற்குபக்கமாக ஓடினார் என்றும், அதைப்பார்த்து தான் பதறிப்போய் வெளியில் வந்து பார்த்தபோது, அவருடைய கை, உடம்பில் இரத்தம் இருந்தது என்றும், தான் வடக்கு பக்கமாக திரும்பி பார்க்கும்போது, சுமார் 100 அல்லது 150 மீட்டர் தூரத்தில் ஒரு நபர் ஓடிக்கொண்டிருந்தார் என்றும், குறிப்பிட்டுள்ளார் என்பது மட்டுமின்றி,

அ.சா.3 அன்பரசபாண்டி தனது முதல் விசாரணையில், தான் குரு சலூன் கடையில் இருந்தபோது, காயம்பட்டிருந்த ராமகிருஷ்ணனை தனது இருச்சக்கர வாகனத்தில் வைத்து மதுரை தேவதாஸ் மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றதாகவும், தனக்கு இந்த வழக்கு பற்றி எதுவும் தெரியாது என்றும் சாட்சியமளித்துள்ளார். எனவே, வழக்கில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியங்களான அ.சா.2 அர்ஜூனன் மற்றும் அ.சா.3 அன்பரசபாண்டி ஆகியோர் வழக்கு சம்பவம் குறித்து சாட்சியமளிக்வில்லை என்பது புலனாகிறது.

19. இந்த வழக்கில் விசாரிக்கப்பட்ட பார்வை மகஜர் மற்றும் அத்தாட்சி சாட்சியான அ.சா.7 கார்த்திக்கேயன் தன்னுடைய சாட்சியில் TN 59 AL 27 என்ற மாருதி ஸ்விப்ட் காரை அ.சா.ஆ.13 அத்தாட்சியில் (12.00 மணி) போலீசார் கைப்பற்றியதாக சாட்சியமளிக்கவில்லை என்பது மட்டுமின்றி, கிராம உதவியாளர் அ.சா.8 சந்தான முருகேசன் என்பவர் 1ம் எதிரியிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது சம்பந்தமாக சாட்சிமளிக்கவில்லை. மேலும் இந்த வழக்கில் 1ம் எதிரி பிரவீன் என்ற சகாயபிரவீன் அ.சா.1 ராமகிருஷ்ணனை வாள்/கத்தியால் தாக்கி அவர் உடலில் வெட்டுக்காயங்கள் மற்றும் குத்துக்காயங்கள் ஏற்படுத்தினார் என்பதை நிரூபிக்க சட்டப்படியாக ஏற்றுக்கொள்ளக்கூடிய சாட்சியங்கள் எதுவும் இந்த வழக்கில் அமையாததால், சாட்சி எண்.9 கிராமநிர்வாக அலுவலகர் திருமதி.முத்துமொழி மற்றும் அ.சா.8 கிராம உதவியாளர் திரு.சந்தன முருகேசன் ஆகியோர் முன்னிலையில் 1ம் எதிரி கொடுத்த

ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில், சான்று பொருட்கள் கைப்பற்றப்பட்டதாக வாதத்திற்காக எடுத்துக்கொண்டாலும் அந்த சங்கதியானது அரசு தரப்பு வழக்கிற்கு எந்த வகையிலும் வலுசேர்க்காது. எனவே, இந்த வழக்கின் எதிரிகள் குறிப்பாக இந்த வழக்கின் 1ம் எதிரி பிரவீன் என்ற சகாய பிரவீனை வழக்கு சம்பவத்துடன் இணைப்பதற்கு அ.சா.8 கிராம உதவியாளர் திரு.சந்தன முருகேசனின் சாட்சியமானது பயன்படாது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

20. இந்நிலையில் இவ்வழக்கில் முன்னிலைப்படுத்தப்பட்ட சாட்சியங்களை ஒருசேர பரிசீலிக்கும்போது, எதிரிகள் மீதான குற்றச்சாட்டுகளானது அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டதாக கருத இயலாது. எனவே சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து எதிரிகளை இந்த வழக்கு சம்பவம் சம்பந்தப்பட்ட குற்றச்சாட்டுகளிலிருந்து விடுதலை செய்யலாம் என்று இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது.

21. முடிவாக, 1ம் எதிரி இ.த.ச. பிரிவுகள் 120(B), 341, 294(b), 307 மற்றும் 506(ii)—ன் கீழும், 2ம் எதிரி இ.த.ச. பிரிவுகள் 120(B), 341 உ/இ 120(B), 294(b) உ/இ 120(B), 307 உ/இ 120(B) மற்றும் 506(ii) உ/இ 120(B)—ன் கீழும், 3ம் எதிரி இ.த.ச. பிரிவுகள் 120(B), 341 உ/இ 120(B), 294(b) உ/இ 120(B), 307 உ/இ 120(B) மற்றும் 506(ii) உ/இ 120(B)—ன் கீழும், 7ம் எதிரி இ.த.ச. பிரிவுகள் 120(B) உ/இ 109, 341 உ/இ 120(B) உ/இ 109, 294(b) உ/இ 120(B) உ/இ 109, 307 உ/இ 120(B) உ/இ

109 மற்றும் 506(ii) உ/இ 120(B) உ/இ 109–ன் கீழும் குற்றவாளிகள் இல்லை எனத் தீர்மானிக்கப்பட்டு கு.வி.மு.ச. 235(1)வது பிரிவின் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

மேலும் எதிரிகள் வழங்கிய பிணைப் பத்திரங்களை ரத்து செய்து உத்திரவிடப்படுகிறது.

இவ்வழக்கில் இந்நீதிமன்ற R.P.R.No.11/2021–ல் தாக்கல் செய்யப்பட்டுள்ள சா.பொ.1 கத்தி, சா.பொ.2 கத்தி உறை ஆகியவை பயனற்றவை என்பதால் மேல்முறையீடு காலத்திற்கு பின் அழிக்கவும், சா.பொ.3 – வெள்ளை நிறமுடைய நோக்கியா செல்போன் காலபோக்கில் பயனற்றுவிட்டதால், அதனை மேல்முறையீட்டு காலத்திற்கு பின் அழிக்கவும், சா.பொ.4 – TN 59 BE 1830– கருப்பு கலர் Honda Dream Yuga இருச்சக்கர வாகனத்தை அதன் உரிமையாளரான இந்த வழக்கின் 2ம் எதிரி மாரிமுத்து இடைக்கால பிணையில் பெற்று சென்றுள்ளதால், அதனை அவரே வைத்துக்கொள்ளவும், மேல்முறையீடு காலத்திற்கு பின் பிணை பத்திரங்கள் ரத்தாகவும், அ.சா.ஆ.14 போட்டாவில் கண்ட TN 59 AL 27 என்ற வெள்ளை நிற Maruti Swift காரை அ.சா.1 ராமகிருஷ்ணனின் அதிகாரம் பெற்ற முகவர் ஜோதி மாதவன் என்பவர் அ.சா.1 ராமகிருஷ்ணனின் சார்பில் இடைக்கால பிணையில் பெற்று சென்றுள்ளதால், அதனை அ.சா.1 ராமகிருஷ்ணன் வைத்துக்கொள்ளவும், மேல்முறையீடு காலத்திற்கு பின் பிணை பத்திரங்கள் ரத்தாகவும் உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் சரிபார்க்கப்பட்டு, 2026ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 08–ஆம் நாளாகிய இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

JOHN SUNDARLAL SURESH

Digitally signed by JOHN SUNDARLAL SURESH
Date: 2026.04.08 16:37:37 +0530

4 வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
மதுரை.

**அரசு தரப்பு சாட்சிகள் :–**

| | |
|---|---|
| அ.சா.1 | திரு.ராமகிருஷ்ணன் |
| அ.சா.2 | திரு.அர்ஜுனன் |
| அ.சா.3 | திரு.அன்பரசபாண்டி |
| அ.சா.4 | திரு.ராஜ்மோகன் |
| அ.சா.5 | திரு.நியாஸ்கான் |
| அ.சா.6 | திரு.ஈஸ்வரன் |
| அ.சா.7 | திரு.கார்த்திகேயன் |
| அ.சா.8 | திரு.சந்தானமுருகேசன், கிராம உதவியாளர், தல்லாகுளம், சாத்தமங்கலம் |
| அ.சா.9 | திரு.மணிமாறன் |
| அ.சா.10 | திரு.மகேஷ்வரன் |
| அ.சா.11 | திரு.சுரேஷ் |
| அ.சா.12 | திரு.அழகுராஜா |
| அ.சா.13 | திரு.பொன்இருளன் |
| அ.சா.14 | திரு.நாகராஜன் |

| | |
|---|---|
| அ.சா.15 | திரு.முன்னமலை |
| அ.சா.16 | திரு.விஜயபத்மநாபன் |
| அ.சா.17 | திரு.சத்தியக்குமார் |
| அ.சா.18 | திரு.பிரபு |
| அ.சா.19 | திரு.ரெங்கநாதன் |
| அ.சா.20 | திரு.ஜாகீர்உசேன் |
| அ.சா.21 | திரு.கோபிக்கண்ணன் |
| அ.சா.22 | திரு.சாம்சன்குணராஜ், தலைமை காவலர், இ–1 புதூர் காவல் நிலையம் |
| அ.சா.23 | திரு.சரவணராஜா, அலுவலக மேலாளர், பாளையங்கோட்டை மத்தியசிறை |
| அ.சா.24 | திரு.விஷ்ணுகாந்த், கண்காணிப்பாளர், மதுரை தெற்கு வட்டார போக்குவரத்து அலுவலகம், மதுரை |
| அ.சா.25 | திரு.காளிமுத்து, சிறப்பு சார்பு ஆய்வாளர், புதூர் காவல் நிலையம், மதுரை |
| அ.சா.26 | மருத்துவர் திரு.ரிஸ்வான்அகமது, அப்போலா மருத்துவனை, மதுரை |
| அ.சா.27 | திருமதி.சுஜாதா, சார்பு ஆய்வாளர், புதூர் காவல் நிலையம், மதுரை |
| அ.சா.28 | திரு.சக்கரவர்த்தி, காவல் ஆய்வாளர், புதூர் காவல் நிலையம், மதுரை |

**அரசு தரப்பு சான்றாவணங்கள் :–**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 22.11.2015 | புகார் வாக்குமூலம் |
| அ.சா.ஆ.2 | 22.11.2015 | புகார்வாக்குமூலத்தில் உள்ள அ.சா.5ன் கையெழுத்து |

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.3 | 22.11.2015 | பார்வை மகஜரிலுள்ள அ.சா.7ன் கையெழுத்து |
| அ.சா.ஆ.4 | 22.11.2015 | அத்தாட்சியிலுள்ள அ.சா.7ன் கையெழுத்து |
| அ.சா.ஆ.5 | 22.11.2015 | அத்தாட்சி (17.00 மணி) |
| அ.சா.ஆ.6 | 22.11.2015 | அத்தாட்சி (18.00 மணி) |
| அ.சா.ஆ.7 | 22.11.2015 | 1ம் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.8ன் கையெழுத்து |
| அ.சா.ஆ.8 | 22.11.2015 | 1ம் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி |
| அ.சா.ஆ.9 | 08.12.2015 | அப்போலா மருத்துவமனை, மதுரையில் வழங்கப்பட்ட அ.சா.1 ராமகிருஷ்ணனின் காயச்சான்று |
| அ.சா.ஆ.10 | 22.11.2015 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.11 | 22.11.2015 | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.12 | 22.11.2015 | மாதிரிவரைபடம் |
| அ.சா.ஆ.13 | 22.11.2015 | அத்தாட்சி (12.00 மணி) |
| அ.சா.ஆ.14 | -- | TN 59 AL 27 என்ற வெள்ளை நிற Maruti Swift காரின் போட்டா |
| அ.சா.ஆ.15 | 11.01.2016 | TN 59 BE 1830 Honda Dream Yuga என்ற வாகனம் குறித்த அறிக்கை |
| அ.சா.ஆ.16 | 11.01.2016 | TN 59 AL 0027 என்ற Maruti Swift வாகனம் குறித்த அறிக்கை |
| அ.சா.ஆ.17 | 22.11.2015 | படிவம் 91 (3 எண்ணம்) |
| அ.சா.ஆ.18 | 28.11.2015 | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை |
| அ.சா.ஆ.19 | 19.12.2016 | அ.சா.11 சுரேஷ் என்பவரின் குவிமுச 164 வாக்குமூலம் |

TNMD010094412016



**<u>அரசு தரப்பு சான்றுப்பொருட்கள்</u> :-**

| | |
|---|---|
| சா.பொ.1 | சுமார் 36-1/2 செ.மீ நீளமுள்ள மரக்கைபிடியுடன் கூடிய கத்தி ஒன்று, அதில் கத்தி பாகம் 25 செ.மீ, கைபிடி பாகம் 11-1/2 செ.மீ, இருபக்க கூர்மையுள்ளது. |
| சா.பொ.2 | சுமார் 35 செ.மீ நீளமுள்ள தோலால் செய்யப்பட்ட கத்தி உறை ஒன்று |
| சா.பொ.3 | வெள்ளை நிறமுடைய நோக்கியா செல்போன் ஒன்று |
| சா.பொ.4 | TN 59 BE 1830- கருப்பு கலர் Honda Dream Yuga இருச்சக்கர வாகனம் ஒன்று |

**எதிரிகள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் :** இல்லை

JOHN SUNDARLAL SURESH

Digitally signed by JOHN SUNDARLAL SURESH
Date: 2026.04.08 16:37:50 +0530

4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
மதுரை.